செய்வதற்கு நம்மால் கூடாததாகையால், இன்னும் தொடர்ந்து நமக்கு பரிந்துபேசுதல் தேவை. புதுசிருஷ்டிகளாக மாம்சத்தில் அபூரணத்தைப் பெற்றிருக்கிற நம்மை முழுமையாக அடக்கி ஆளமுடியாது. ஆதலால், கிருபாசனமும், ஒரு பரிந்துபேசுபவரும் நமக்கு தேவையாயுள்ளது. இவர்மூலமே பிதாவுடனான நமது தற்கால உறவை காத்துக்கொள்ளமுடியும், உலகத்தோடுகூட ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படாதிருக்கமுடியும்.

---

R 5929

## உங்களுக்குள் நிலவும் சமாதானம்

## AT PEACE AMONGST YOURSELVES

"வைரத்தைக்கொண்டே மற்றொரு வைரத்தை அறுக்கமுடியும்" என்ற பழமொழியை நாம் எல்லாரும் கேள்விப்பட்டிருப்போம். எல்லா சம்பத்துக்களும் மிக கடினமானதும் மிக தூய்மையாயுமுள்ளன. இவைகளது மதிப்பை அதனதன் கடினத்தன்மையே அதிகரிக்கிறது. கர்த்தரது ஜனங்கள் எல்லோரும் சம்பத்துக்களாக உள்ளனர். கர்த்தருடைய கிருபையால் அவர்கள் தூய்மையாக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், தெளிந்த குணாதிசயங்களை பெறுகிறார்கள். இதுவே நிஜமாக இருந்து, முன்னர் நாம் குறிப்பிட்டதுபோல், குறைந்த கடினத்தன்மையுள்ள பொருட்கள் ஒன்றிணைவதைக் காட்டிலும், இவைகள் ஒன்றுசேரும்போது, வெட்டப்படுதலும், உராய்தலின் அபாயங்களும் அதிகரிக்கும். களிமண்ணும் மெல்லிய பசைக்கலவையும் எந்தப் பொருளையும் அறுக்காது. மெல்லிய பசை போன்ற குணாதிசயத்தை வெளிப்படுத்தாது.

இதை நினைவில்கொண்டு, கர்த்தருடைய பிள்ளைகள் ஒருவருக்கொருவர் மிகவும் இரக்கமுடையோராயும், ஒருவரையொருவர் அதிக உற்சாகப்படுத்துவோராயும் இருக்கவேண்டும். கர்த்தரைப்போலவே நேர்மறையான குணாதிசயம், பலமுள்ள குணாதிசயம், நிலையான நோக்கம் ஆகியவற்றை பெற்றிருந்து சிலவேளைகளில் இந்த குணாதிசயத் தன்மைகள் சில துன்பங்களை வருவித்தாலும், பிறரை உற்சாகப்படுத்த கற்கவேண்டும்.

**கர்த்தரின் பிள்ளைகள் சண்டையை வளர்ப்போரல்ல** :–

கர்த்தருடைய ஜனங்கள் சமாதானம் செய்வோராக இருக்கவேண்டும். சண்டையை வளர்ப்போராக அல்ல என்று நம் போதகரால் விசேஷமாக தடைஆணை பெற்றுள்ளோம். உபத்திரவத்தைத் தூண்டிவிடுவதற்கு சிறப்பாற்றல் எதுவும் தேவையில்லை. சண்டை சச்சரவைத் தடுப்பதற்கும், ஒருவேளை சிறந்த நோக்கங்கள் நிலவினால் கர்த்தருடைய பிள்ளைகள் மத்தியில் சாந்தகுணம், தயாளகுணம், பொறுமை மற்றும் பரிசுத்தஆவியின் மற்ற தன்மைகள் போதுமான அளவு தேவைப்படுகிறது. விரோதியானவன் நம்மை சமாதானத்தின் பாதைகளிலிருந்து வழிவிக்க சோதிக்காதபடிக்கு எந்தளவு நாமனைவரும் விழிப்பாய் காத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது!

நமக்கும் மற்றவர்களுக்குமிடையேயான வேறுபாடு கொள்கையின் அடிப்படையிலானதா என்று நாம் சரியாக நிதானிப்பதற்கு, பரத்திலிருந்து வருகிற ஞானமும், அனுபவமும் போதுமானஅளவு தேவையாயிருக்கிறது. சில அடிப்படை சத்தியங்களை குழப்பங்களுக்கு உட்படுத்தும்போதும், அல்லது கொள்கைகளின் அடிப்படையில் இல்லாமல் எழும் அபிப்பிராயங்களாகவோ, இரண்டில் ஒன்றை தெரிவுசெய்வது பற்றியோ கேள்வி எழும்போதும் பரலோகத்தின் ஞானமும் அனுபவமும் தேவையாயிருக்கிறது. மேற்கண்டவற்றுள், இரண்டாவதாக சொல்லப்பட்ட விஷயத்தில், சமாதானத்தின் நிமித்தமாக, நாம் நம்மை மனப்பூர்வமாக நடைமுறை செயல்பாடுக்கு ஒப்புக்கொடுத்துவிடவேண்டும். ஆனால் கொள்கை சம்பந்தப்பட்ட பிரச்சனை எழும்போது, இந்த முறையை செயல்படுத்தக்கூடாது. என்னதான் நமக்குமுன்பாக வஞ்சனை அடிக்கடி முன்வைக்கப்பட்டபோதிலும், சத்தியக்கோட்பாடுகளும் நீதியுமே நம் விருப்பங்களாக இருக்கவேண்டும். இது தவறு என்று அனுபவத்தால் நாம் கற்றுக்கொண்டு, அப்படிப்பட்ட ஒவ்வொரு ஆலோசனையும் தீர்க்கமாக ஆராயப்படவேண்டும். நமது சொந்த கருத்துக்கும் தெய்வீக ஏற்பாட்டின்படியான போதனைகள் மற்றும் கொள்கைகள் உள்ளடங்கிய அந்த கேள்விகளுக்குமிடையே உள்ள வித்தியாசத்தை புரிந்துகொள்ள உதவும்படி கர்த்தருடைய ஞானத்தைக் கேட்கவேண்டும்.

சபையின் ஒவ்வொரு அங்கமும் பரிசுத்தஆவியின் கனிகளை உற்பத்திசெய்ய ஊக்கத்தோடு போராடவேண்டும். இவ்வாறு இந்த தன்மைகள் நம்முள் மேம்பாடுஅடைய இந்த ஆவியின் குணாதிசயங்களை நினைவுகூர்ந்து, அதை நம்முள் பயிற்சிசெய்து, பிறகு பரிசுத்தஆவியின் ஆதிக்கத்தை நம் இருதயங்களிலும் ஜீவியத்திலும் செயல்பட செய்து வெளிப்படுத்தி, இதன்மூலம் மற்றவர்களுக்கு முன்மாதிரிகையாக நம்மை நிறுத்தவும் வேண்டும்.

**அடிக்கடி நிகழ்கின்ற தவறுகள் :–**

நமது நிதானிப்பை பயிற்சிசெய்து, அதன்மேல் நாம் செயல்படுவதோடு நம் பொறுப்புணர்வு முடிவடைகிறது என்பதை மறந்தவர்களாக, முழு பொறுப்புணர்வின் பாரமும் நம்மேலேயே உள்ளது என்று எண்ணுவதே நாம் அடிக்கடி செய்கிற தவறாகும்.

சில நுட்பமான விஷயங்களில் சபையில் சண்டையை வருவிக்கும் தவறுகள் நிகழ்வதற்கு மிக முக்கிய காரணம்– கர்த்தரிடத்தில் விசுவாசமில்லாததே ஆகும். சபையில் தம் ஜனங்கள் எல்லோருக்கும் நன்மைக்கேதுவான அனுபவங்களை தம் வழிகாட்டுதலின்படி கொடுக்க கர்த்தரால் கூடும் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். அப்படியிருக்கும் பட்சத்தில், சபையில் நாம் விரும்புகிறபடி காரியங்கள் துல்லியமாக நடக்காது. அது நமக்கு நன்மைக்கேதுவாகவே இருக்கும்.

–––––––––––––––